



ISSN: 2582–5518

# புதுகை வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351






சனி ❖ ஜூலை. 29, 2023 புதுக்கோட்டை 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 295 ❖ ரூ.10


### என்எல்சி போராட்டத்தில் வன்முறை - பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ்

# விடுவிப்பு

## கலவரத்தைக் கட்டுப்படுத்த போலீஸார், தடியடி, கூட்டத்தைக் கலைக்க முயன்ற போலீஸார், வானை நோக்கி துப்பாக்கியால் சுட்டு கூட்டத்தை கலைத்தனர்.

**நெய்வேலி, ஜூலை.29-**
**நெய்வேலி என்எல்சியில் நடந்த போராட்டத்தைத் தொடர்ந்து கைது செய்யப்பட்ட பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் விடுவிக்கப்பட்டார்.**

நேற்று என்எல்சியை முற்றுகையிட்டு பாமக போராட்டம் நடத்திய நிலையில், அக்கட்சியின் தலைவர் அன்புமணி ராமதாஸ் கைது செய்யப்பட்டார். இதைத்தொடர்ந்து அங்கு நடத்தப்பட்ட கல்வீச்சு தாக்குதலில் காவல்துறையினர் உள்ளிட்ட பலர் காயமடைந்தனர். கலவரத்தைக் கட்டுப்படுத்த போலீஸார், தடியடி, கண்ணீர் புகை குண்டுகளையும் பயன்படுத்தினர். மேலும், தண்ணீர் பீய்ச்சி அடித்து கூட்டத்தைக் கலைக்க முயன்ற போலீஸார், வானை நோக்கி துப்பாக்கியால் சுட்டு கூட்டத்தை கலைத்தனர்.

இந்த கலவரத்தில், காவல்துறை வாகனங்கள் சேதப்படுத்தப்பட்டன. இதைத்தொடர்ந்து பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் உள்ளிட்ட 300-க்கும் மேற்பட்டவர்களை காவல்துறையினர் கைது செய்து அருகில் உள்ள திருமண மண்டபத்தில் அடைத்தனர். இந்த





வன்முறை சம்பவம் தொடர்பாக 400-க்கும் மேற்பட்டோர் மீது காவல்துறையினர் வழக்குப்பதிவு செய்துள்ளனர். அன்புமணி ராமதாஸை விடுவிக்க கோரி கடலூர் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் சாலை மறியல் போராட்டம் நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து அங்கு அரசுப் பேருந்துகள் இயக்கம் முழுமையாக நிறுத்தப்பட்டன.

வன்முறை நிகழ்ந்த பகுதிகளில் ஆய்வு செய்வதற்காக தமிழக காவல்துறை டிஜிபி சங்கர் ஜிவால் நெய்வேலி விரைந்தார். இந்நிலையில், திருமண மண்டபத்தில் அடைக்கப்பட்டுள்ள பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் உள்ளிட்டோர் மாலையில் விடுவிக்கப்பட்டனர். இதன் பின்னர், அன்புமணி ராமதாஸ் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியது: "நிலத்தை கையகப்படுத்துதல் வாழ்வாதாரத்துக்கும், விவசாயத்துக்கும் எதிரான ஒரு செயல். விவசாயிகளுக்கு எதிரான ஒரு செயல். காலங்காலமாக இந்த மண் நமக்கு சோறு போட்ட மண். இந்த மண்ணை தயவுசெய்து அழிக்காதீர்கள். என்எல்சி நிர்வாகத்துக்கு எத்தனையோ மாற்று வழிகள் இருக்கிறது. என்எல்சிக்காக ஒட்டுமொத்த கடலூர் மாவட்டத்தையும், விவசாயத்தையும் அழிக்காதீர்கள். நிலங்களை கையகப்படுத்தும் திட்டத்தை நிறுத்திவிடுங்கள். இது எங்களுடைய ஒரு அன்பான வேண்டுகோள்.

என்எல்சி நிர்வாகம் 66 ஆண்டு காலம் இந்த மண்ணையும், மக்களையும் அழித்து ஒழித்துவிட்டு இன்னும் துடித்துக் கொண்டிருக்கிறது. என்எல்சி நிர்வாகத்தின் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கிறது. அவர்கள் தமிழகத்துக்கு இனி தேவை கிடையாது. அதை தமிழக அரசு புரிந்து கொள்ள வேண்டும். பாமக தொடர்ந்து விவசாயத்துக்காக, விவசாயிகளுக்காக, விளை நிலங்களுக்காக, சுற்றுச்சூழலுக்காக, இயற்கையாக, நீர் நிலைகளுக்காக, மக்களின் உரிமைகளுக்காக தொடர்ந்து போராடும்.

எந்த வகை போராட்டத்தையும் நடத்த நாங்கள் தயாராக இருக்கிறோம். மண்ணுக்கும் மக்களுக்கும் அவர்களுடைய உரிமைகளைப் பெற எந்த எல்லைக்கும் செல்ல தயாராக இருக்கிறோம். தமிழக முதல்வருக்கு மீண்டும் என்னுடைய அன்பான வேண்டுகோள், என்எல்சிக்காக நிலத்தை கையகப்படுத்தும் திட்டத்தை ரத்து செய்யுங்கள்" என்று அவர் கூறினார்.

# எழுச்சியுடன் தொடங்கியது புதுக்கோட்டை புத்தகத் திருவிழா

### அமைச்சர் எஸ்.ரகுபதி தொடங்கி வைத்தார்

புதுக்கோட்டை, ஜூலை.29-
வாசகர்கள், மாணவர்களின் எழுச்சியான கொண்டாட்டத்திற்கிடையே புதுக்கோட்டை 6-ஆவது புத்தகத் திருவிழாவை சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி நேற்று தொடங்கி வைத்தார்.

புதுக்கோட்டை மாவட்ட நிர்வாகமும், தமிழ்நாடு அறிவியல் இயக்கமும் இணைந்து 6-ஆவது புதுக்கோட்டை புத்தகத் திருவிழாவை ஜூலை 28 முதல் ஆகஸ்ட் 6 வரை புதுக்கோட்டை நகர்மன்றத்தில் நடத்தி வருகிறது. இப்புத்தகத் திருவிழாவில் 75 பதிப்பகங்களிலிருந்து சுமார் 3 லட்சத்திற்கும் மேற்பட்ட அறிவியல், அரசியல், கவிதை, சிறுகதை, நாவல், வரலாறு உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளின் கீழ் புத்தகங்கள் 112 அரங்குகளில் வைக்கப்பட்டுள்ளது.

பள்ளிமாணவர்களின் பல்வேறு விதமான கலை நிகழ்ச்சிகளுடன் எழுச்சியுடனும் கொண்டாட்டத்துடனும் தொடங்கி புத்தகத் திருவிழாவை மாவட்ட ஆட்சியர் ஐ.சா.மெர்சி ரம்யா தலைமையில் தமிழ்நாடு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார். அவர் பேசும்போது:- ஒவ்வொரு மனிதனும் தன்னைப்பற்றியும், தனது நாகரீகத்தைப் பற்றியும் தெரிந்துகொள்வதற்கு வரலாறு மிக முக்கியமாகும். தமிழனின் வரலாறு 3000 ஆண்டிற்கு மேற்பட்ட பெருமையைக் கொண்டது. நம்முடைய வரலாற்றினை அறிந்து



கொள்வதற்கு புத்தகங்கள் மிக முக்கியமான பங்களிப்பைச் செலுத்துகிறது. நம்மை நாமே அறிந்து கொள்வதற்கும், சமூகத்தைப் புரிந்து கொள்வதற்கும் வாசிப்பு பழக்கத்தை வளர்த்துக்கொள்ள வேண்டும். விலைமதிப்புமிக்க செல்வம் கல்வி. இதை நம்மிடமிருந்து யாராலும் பறிக்க முடியாது. யாராலும் திருட முடியாக சொத்து கல்வியும், வாசிப்பும் மட்டுமே.

சிறந்த பொருளாதாரத்தை ஈட்டுவதற்குக்கூட கல்வி மிகவும் அவசியமாகிறது. தமிழனின் வளர்ச்சியில் பெரும் பங்கு வகிப்பது கல்வி. அப்படிப்பட்ட கல்வி செல்வத்தினை அனைவருக்கும் அளிக்க வேண்டும் என்ற அடிப்படையில், தமிழக அரசு பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. வாசிப்பு பழக்கத்தை மாணவ, மாணவிகளிடம் ஏற்படுத்தும் வகையில் அனைத்து பள்ளிகளிலும் நூலகத்திற்கான கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருகிறது. இதன் ஒருபகுதியாக மதுரையில் வரலாற்று சிறப்புமிக்க 'கலைஞர் நூற்றாண்டு நூலகத்தினை" முதலமைச்சரால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

தமிழனின் அடையாளமாக விளங்கும் வாசிப்பு பழக்கத்தை மேலும் வளர்க்கும் வகையில் புதுக்கோட்டை நகர்மன்றத்தில் 10 நாட்கள் நடைபெறும் புத்தகத் திருவிழாவில் மாவட்ட மக்களும், மாணவர்களும் பங்கேற்று, தங்களுக்குத் தேவையான புத்தகங்களை வாங்கி படித்து பயன்பெற வேண்டும் என்றார்.

சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர். வை.முத்துராஜா (புதுக்கோட்டை), சின்னதுரை (கந்தர்வகோட்டை), காவல்துறை திருச்சி சரக துணைத் தலைவர் (சிறைத்துறை) ஜெயபாரதி, மாவட்ட வருவாய் அலுவலர் மா.செல்வி, முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே. செல்லபாண்டியன், முன்னாள் எம்எல்ஏ கவிதைப்பித்தன், மாவட்ட ஊராட்சிக்குழுத்தலைவர் த.ஜெயலட்சுமி, நகர்மன்றத் தலைவர் திலகவதி செந்தில், முதன்மைக் கல்வி அலுவலர் எம். மஞ்சுளா, கோட்டாட்சியர் முருகேசன், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் க.கருணாகரன், நகர்மன்ற துணைத்தலைவர் லியாகத்அலி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் ரெ.மதியழகன், ஒருங்கிணைப்பாளர்கள் தங்கம்மூர்த்தி, அ.மணவாளன், ஆர்.ராஜ்குமார், மு.முத்துக்குமார், ஜீவி, டி.விமலா, க.சதாசிவம், ராசி.பன்னீர்செல்வம், ஈ.பவுனம்மாள், மு.கீதா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# அறுவடை செய்யும் வரை காத்திருக்க முடியாதா? என்எல்சி நிர்வாகத்திடம் உயர் நீதிமன்றம் சரமாரி கேள்வி

சென்னை, ஜூலை.29-
"நெய்வேலியில் இருபது ஆண்டுகளாக கையகப்படுத்தப்பட்ட நிலத்தை சுவாதீனம் செய்யாமல் இருந்துவிட்டு, தற்போது பயிரை அறுவடை செய்யும் வரை இரண்டு மாதங்களுக்கு காத்திருக்க முடியாதா?" என்று என்எல்சி நிர்வாகத்திடம் சென்னை உயர் நீதிமன்றம் கேள்வி எழுப்பியுள்ளது.

சென்னை உயர் நீதிமன்றத்தில், என்எல்சி நிர்வாகம் அவசர வழக்கு ஒன்றை தாக்கல் செய்தது. என்எல்சி நிர்வாகத்துக்கும், அங்குள்ள தொழிற்சங்கங்களுக்கும் இடையிலான பிரச்சினைகளின் காரணமாக, தொழிற்சங்கங்கள் வேலை நிறுத்தப் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ளன. இந்த வேலைநிறுத்தப் போராட்டத்துக்கு தடை விதிக்க உத்தரவிட வேண்டும் என்று என்எல்சி நிர்வாகம் கோரியிருந்தது.

இந்த அவசர வழக்கு நீதிபதி தண்டபாணி முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது காவல் துறை தரப்பில், நெய்வேலியில் வெள்ளிக்கிழமை பாமக சார்பில் நடந்த போராட்டம் கட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது எனக் கூறி, அது தொடர்பான வீடியோ ஆதாரங்கள் தாக்கல் செய்யப்பட்டன.

இதைத் தொடர்ந்து வழக்கை விசாரித்த நீதிபதி, என்எல்சி நிர்வாகத்துக்கும், அங்கு பணியாற்றும் ஊழியர்களுக்கும் எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையில், மாவட்ட ஆட்சித் தலைவரும், காவல் கண்காணிப்பாளரும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று உத்தரவிட்டார். மேலும், இது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த அறிக்கையை வரும் ஆகஸ்ட் 3-ம் தேதி தாக்கல் செய்ய வேண்டும் என உத்தரவிட்டு விசாரணையை ஒத்திவைத்தார்.

பின்னர், என்எல்சிக்காக கையகப்படுத்தப்பட்ட நிலங்களில் ஜேசிபி இயந்திரங்களைக் கொண்டு அகற்றியது குறித்து நீதிபதி கேள்வி எழுப்பினார். அப்போது என்எல்சி தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், "சம்பந்தப்பட்ட விவசாயிகளுக்கு நிலத்தின் மதிப்பைவிட



மூன்று மடங்கு அதிகமான இழப்பீடு வழங்கியுள்ளோம். 20 ஆண்டுகளுக்கு முன்பு கையகப்படுத்தப்பட்ட அந்த நிலங்களுக்கு 10 ஆண்டுகளுக்கு முன்பே இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டது. ஆனால், தற்போது அந்த நிலத்தை சுவாதீனம் எடுத்துக்கொள்ள நிலத்தின் உரிமையாளர்கள் எதிர்ப்பு தெரிவிக்கின்றனர்" என்று தெரிவித்தார்.

அப்போது குறுக்கிட்ட நீதிபதி, "20 ஆண்டுகளாக கையகப்படுத்தப்பட்ட நிலத்தை சுவாதீனம் செய்யாமல் இருந்துவிட்டு, தற்போது பயிரை அறுவடை செய்யும் வரை இரண்டு மாதங்களுக்கு காத்திருக்க முடியாதா?" என்று கேள்வி எழுப்பினார்.

மேலும், "பயிரிடப்பட்டுள்ள நிலங்களில் புல்டோசரைக் கொண்டு கால்வாய் தோண்டும் பணிகளைப் பார்க்கும்போது எனக்கு அழுகை வந்துவிட்டது. வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன் என்று கூறிய வள்ளலார் பிறந்த ஊருக்கு அருகில் பயிர்கள் அழிக்கப்படுவதை காண முடியவில்லை. நிலத்தை எடுப்பதற்கு ஆயிரம் காரணங்கள் கூறினாலும், பயிர்களை அழிக்கப்படுவதை ஏற்க முடியாது. ஒரு பயிர் என்பதை சாதாரணமாக எடுத்துக் கொள்ள முடியாது. அந்த பயிர்தான் மனிதன் உள்ளிட்ட அத்தனை ஜீவராசிகளுக்கும் வாழ்வாதாரமாக இருக்கக் கூடியது. நாம் உயிருடன் இருக்கும் காலத்திலேயே மிகப் பெரிய பஞ்சத்தை சந்திக்கப் போகிறோம்.

அரிசிக்கும், காய்கறிக்கும் அடித்துக் கொள்ளும் காட்சிகளை நம்தலைமுறையிலேயே நாம் காணப்போகிறோம். அப்படி ஒரு நிலை வரப்போகிறது. அப்போது இந்த நிலக்கரி எல்லாம் பயன்படாது. இந்தக் கருத்துகளுக்காக என்எல்சி நிர்வாகம் கோபித்துக் கொண்டாலும் பரவாயில்லை.

பொன்னியின் செல்வன் நாவலை ஒட்டி பயணிக்கக் கூடிய அணைக்கரை, கொள்ளிடம் பாய்ந்தோடும் நெய்வேலியின் அழகை மறக்கமுடியாது. ஆனால், இந்த இடங்கள் எல்லாம் தற்போது பெருமளவில் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. பஞ்சத்தின் ஆபத்தை உணராமல் தோண்டிக் கொண்டே இருக்கிறார்கள். சோறுடைத்த சோழநாடு என்ற பெருமையை இதுபோன்ற நிறுவனங்களால் இந்தப் பகுதிகள் அதன் பெருமையை இழந்துவிட்டன.

மேலும், பூமியைத் தோண்டி தோண்டி நிலக்கரி, மீத்தேன் என ஒவ்வொன்றாக எடுத்துக் கொண்டே இருந்தால், அந்த வெற்றிடத்தை எப்படி நிரப்புவது? மூன்று மடங்கு அல்ல, எத்தனை மடங்கு இழப்பீடு வழங்கினாலும் கூட அந்தப் பணத்தை வைத்துக் கொண்டு விவசாயி என்ன செய்ய முடியும்? மக்கள் பாதிக்கப்படுவதை அரசு அதிகாரிகள் புரிந்து கொள்ளாமல் இயந்திரத்தனமாக செயல்பட்டுள்ளனர்" என்றார்.

இந்த விசாரணையின் போது குறுக்கிட்ட என்எல்சி தரப்பு வழக்கறிஞர், இந்த நீதிமன்ற அறையில் எரியும் மின் விளக்குகள், குளிர் சாதன வசதிக்கான மின்சாரம் கூட நிலக்கரியில் இருந்து தயாரிக்கப்பட்டதுதான் என்று தெரிவித்தார். இதையடுத்து, தனது அறையில் உள்ள குளிர் சாதன வசதியை நிறுத்திவைக்க நீதிபதி உத்தரவிட்டார். பூமியில் உள்ள அனைவரும் ஏசி காற்றில் வாழ்வது இல்லை. புங்கை மரத்தின் காற்றிலும், வேப்ப மரத்தின் காற்றிலும் இளைப்பாறும் ஏராளமானவர்கள் உள்ளனர். அதிகாரிகள் இதனை உணர வேண்டும் என்று நீதிபதி தனது வேதனையையும், அதிருப்தியையும் தெரிவித்தார்.

## தென்னைநார் தொழில் நிறுவனங்களின் கோரிக்கைகளை பரிசீலிக்க உயர்மட்ட நிபுணர் குழு: முதல்வர் ஸ்டாலின்

**சென்னை, ஜூலை.29-**
**காயர் பித் மற்றும் பிற தென்னைநார் சம்பந்தப்பட்ட தொழில் நிறுவனங்களின் கோரிக்கைகளை பரிசீலித்து அரசுக்கு பரிந்துரைக்க உயர்மட்ட நிபுணர் குழு அமைக்கப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "காயர் பித் மற்றும் பிற தென்னை நார் சம்பந்தப்பட்ட தொழில்களை வெள்ளை வகையிலிருந்து ஆரஞ்சு வகையாக மறுவகைப்படுத்தியது தொடர்பாக பல்வேறு தென்னை நார் தொழில் சார்ந்த சங்கங்களின் கோரிக்கைகள் அரசுக்கு பெறப்பட்டுள்ளன.

தமிழகத்திலுள்ள தென்னை சார் தொழில் நிறுவனங்களின் வளர்ச்சியிலும் நீடித்த நிலைத்தன்மையினை உறுதிசெய்வதிலும் மிகுந்த ஆர்வம் கொண்டுள்ள தமிழக அரசு 'தமிழ் நாடு கயிறு வணிக மேம்பாட்டு நிறுவனம்' என்ற நிறுவனம் ஒன்றினை துவக்கி மதிப்புக்கூட்டப்பட்டுள்ள பொருட்கள் உற்பத்தியினை அதிகரிக்கவும் உள்ளூர் மற்றும் ஏற்றுமதி சந்தை வாய்ப்பினை அதிகரிக்கவும் பல்வேறு முன்னெடுப்புகளை மேற்கொண்டுள்ளது. இதன் மூலம் நம் மாநிலத்தில் உள்ள



தென்னை விவசாயிகளின் பொருளாதாரம் மேம்படும்.

தமிழகத்தில் சுமார் நான்காயிரத்துக்கும் மேற்பட்ட தென்னை நார் மற்றும் காயர் பித் உள்ளிட்ட தென்னை சார் தொழில் நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. பெருமளவில் பெண்களுக்கு வேலை வாய்ப்பினை வழங்குவதுடன் மொத்தத்தில் சுமார் 2 லட்சத்திற்கும் மேற்பட்ட கிராமப்புற வேலைவாய்ப்புகளை வழங்கி வரும் இந்நிறுவனங்களின் கோரிக்கையை தமிழக அரசு மிகுந்த கனிவுடன் பரிசீலித்து வருகிறது.

இந்நிலையில் இந்த கோரிக்கை குறித்து அனைத்துதரப்பினருடனும் கலந்தாலோசித்து, இப்பொருள் குறித்து விரிவாக ஆராய்ந்து, அரசுக்கு பரிந்துரைக்க உயர்மட்ட நிபுணர் குழுவை அமைக்க தமிழக அரசு முடிவு செய்துள்ளது. இம்முயற்சி சுற்றுச்சூழலுக்கு உகந்தவகையிலும் அதே சமயம் இந்நிறுவனங்கள் நிலைத்தன்மையுடன் இயங்கிடவும் வழி வகுக்கும்" என்று முதல்வர் கூறியுள்ளார்.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்

அன்பை உணர மட்டுமே முடியும்.
ஒருபோதும் பார்க்க முடியாது.
அதேபோல் தான் எதையும்
நிரூபிக்க முயற்சி
செய்யாதீர்கள்!




# மணிப்பூர் வீடியோ மழைக்கால கூட்டத்தொடருக்கு முந்தைய நாள் வெளியானதில் சதி அமைச்சர் அமித் ஷா

புதுடெல்லி, ஜூலை. 29-
மணிப்பூரில் கடந்த மே 4-ம் தேதி நடைபெற்ற வன்முறையில் ஒரு கும்பல் பழங்குடியினப் பெண்களை ஆடையின்றி இழுத்துச் சென்ற வீடியோ நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடருக்கு முந்தைய நாள் வெளியானதன் பின்னனியில் சதி இருப்பதாக மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா கூறியுள்ளார்.

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் கடந்த 20ஆம் தேதி தொடங்கியது. இந்நிலையில் ஜூலை 19-ம் தேதி மணிப்பூரில் இரண்டு இளம் பெண்கள் நிர்வாணமாக இழுத்துச் செல்லப்பட்டு பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்ட வீடியோ வெளியானது. அந்த வீடியோவில் இருந்த இளம்பெண்கள் குகி இனத்தவர் என்பதும் அவர்களை இழுத்துச் சென்றவர்கள் மைத்தேயி இனத்தவர் என்பதும் தெரியவந்தது. மணிப்பூர் வீடியோ விவகாரத்தில் நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டு வரும் சூழலில் இந்த வீடியோ வெளியான



தருணத்தின் பின்னணியில் சதி இருப்பதாக உள்துறை அமைச்சர் அமித் ஷா கூறியுள்ளார்.

இது தொடர்பாக வியாழக்கிழமை அவர் செய்தியாளர்கள் சந்திப்பில் பேசுகையில், "மணிப்பூரில் 1990கள் முதல் மைத்தேயி - குகி இன மோதல்கள் அவ்வப்போது நடைபெறுகின்றன. மே 4ஆம் தேதி நடந்த சம்பவத்தை வீடியோவாக பதிவு செய்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் பயன்படுத்திய வீடியோ பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. அந்தக் காட்சிகள் ஆய்வு செய்யப்பட்டன. முதல்நிலை விசாரணையில் இந்த வீடியோவை ஜூலை 19 ஆம் தேதி நாடாளுமன்ற கூட்டத்தொடர் தொடங்குவதற்கு முதல் நாளில் வெளியிட வேண்டிய அவசியம் குறித்து ஆராயப்படுகிறது. இதன் பின்னணியில் மோடி அரசின் மாண்பை குலைக்கும் சதி இருப்பதாகத் தெரிகிறது.

அதேபோல் மணிப்பூர் அமைதியை சிதைக்கும் வகையில் உலா வரும் மேலும் 2 வீடியோக்கள் தொடர்பாகவும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. அவை மியான்மரில் கடந்த 2022-ல் நடந்த வன்முறைச் சம்பவங்களில் பதிவு என்பதும் தெரியவந்துள்ளது.

சிபிஐ-யிடம் ஏற்கெனவே 6 வழக்குகள் அனுப்பப்பட்டுள்ளன. 7வது வழக்கும் அனுப்பிவைக்கப்படவுள்ளது. நடுநிலையான விசாரணைக்காக இந்த வழக்கு விசாரணை மணிப்பூர் மாநிலத்துக்கு வெளியே நடக்க வேண்டும் என்று விரும்புகிறோம். மணிப்பூர் தொடர்பாக மூன்று வழக்குகள் என்ஐஏ-விடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது" என்றார்.

இந்த சூழ்நிலையில், மணிப்பூரில் பெண்கள் ஆடையின்றி இழுத்துச் செல்லப்பட்ட வீடியோ விவகாரம் தொடர்பாக விரிவான தகவல்களைப் பெறும் வகையில் மத்திய அரசு சிபிஐ விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# மகளிர் உரிமைத் தொகை பணிகளால் கிராம நிர்வாக அலுவலகங்கள் பூட்டப்படுவதாக பொதுமக்கள் புகார்

திருப்பூர் , ஜூலை. 29-
மகளிர் உரிமைத் தொகை தொடர்பான பணிகளில் வருவாய்த் துறையினரை ஈடுபடுத்துவதால் கிராம நிர்வாக அலுவலகங்கள் பூட்டப்படுவதாக புகார் எழுந்துள்ளது.

இது தொடர்பாக திருப்பூர் ஆட்சியர் தா.கிறிஸ்துராஜுக்கு பல்லடம் தாலுகா நுகர்வோர் விழிப்புணர்வு இயக்கத் தலைவர் கே.வி.எஸ். மணிக்குமார் அனுப்பிய கடிதம்: தமிழ்நாடு அரசின் மகளிர் உரிமைத் தொகை வழங்கும் திட்டப் பணிகளில் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வருவாய் ஆய்வாளர் உள்ளிட்ட வருவாய்த் துறை ஊழியர்களை ஈடுபடுத்துவதால், பொது மக்களின் ஆயிரக்கணக்கான கோரிக்கைமனுக்கள்கிடப்பில் போடப்பட்டுள்ளதாக புகார்கள் எழுகின்றன.

தமிழ்நாடு அரசு மகளிர் உரிமைத் தொகை ரூ.1000 வழங்கும் திட்டத்தில் அரசாணை பிறப்பித்து, இத்திட்டத்தை நிறைவேற்ற கூட்டுறவு, உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு, இல்லம் தேடி கல்வி திட்டப் பணிகளில் உள்ள தன்னார்வலர்கள் உள்ளிட்டோரை கொண்டு செயல்படுத்தும் நோக்கில், அதற்கான பயிற்சிக் கூட்டங்கள் மாவட்ட நிர்வாகத்தால் பலமுறை நடத்தப்பட்டது.

மேலும், ரேஷன் கடை ஊழியர்கள் மூலமாக விண்ணப்பப் படிவம் வழங்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்ட மனுக்களை பெறும் முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. இதில், கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வருவாய் ஆய்வாளர் உள்ளிட்ட வருவாய்த் துறை ஊழியர்களை ஈடுபடுத்துவது தேவையற்றது.

ஏற்கெனவே, பல்லடம் வட்டத்தில் வருவாய்த் துறையில் 4 ஆயிரம் மனுக்கள் நடவடிக்கை இன்றி தேங்கியுள்ளன. இந்நிலையில், கடந்த 4 நாட்களாக எந்த வித முன்னறிவிப்பும் இல்லாமல் கிராம நிர்வாக அலுவலகங்கள் பூட்டப்பட்டுள்ளன. மேலும், 10 நாட்களுக்கு மகளிர் உரிமைத்தொகை திட்டப்பணிகளை தவிர வேறு பணிகளில் ஈடுபடக்கூடாது என மாவட்ட நிர்வாகம் கூறியுள்ளதாக தெரிகிறது.

இதனால், வருவாய்த்துறையில் மனுக்கள் பெருமளவில் தேக்கமடைந்து, பொதுமக்கள் காத்திருக்கும் அவல நிலை ஏற்படும். மகளிர் உரிமைத் தொகை வழங்கும் திட்டப் பணிகளில், ஏற்கெனவே 4 துறை அலுவலர்கள் ஈடுபட்டு வருவதால், மேற்படிதிட்டப் பணியில் வருவாய்த் துறையினர் ஈடுபடுவதை தவிர்க்க வேண்டும். இவ்வாறு அதில் குறிப்பிட்டுள்ளார்.




### பவன் கல்யாண் படங்களால்

# இளம்பெண்கள் பாதிப்பு ஆந்திர மகளிர் ஆணைய தலைவி குற்றச்சாட்டு

திருப்பதி , ஜூலை. 29-
ஜனசேனா கட்சி தலைவரும், திரைப்பட நடிகருமான பவன் கல்யாண் கடந்த சில மாதங்களுக்கு முன்பு ஆந்திராவில் ஏராளமான இளம் பெண்கள் காணாமல் போனதாக குற்றம் சாட்டினார். அவரது பேச்சுக்கு எதிர்ப்பு தெரிவித்த ஆந்திர மாநில மகளிர் ஆணைய தலைவி வாசிரெட்டி பத்மா கூறியதாவது:-

தெலுங்கு தேசம் கட்சித் தலைவர் சந்திரபாபு நாயுடு மற்றும் ஜனசேனா தலைவர் பவன் கல்யாண் இருவரும் பெண்களை மதித்து பேசியதாக சரித்திரம் இல்லை. ஆந்திராவில் காணாமல் போன பெண்களில் 78 சதவீதம் பேர் மீட்கபட்டுள்ளனர்.

இதுகுறித்து காவல்துறை தலைமை இயக்குனர் தெளிவு படுத்தி உள்ளார். ஆந்திராவை தவிர வேறு எங்கும் இது நடக்கவில்லை என கூறிய பவன் கல்யாண்



மகாராஷ்டிரா, மத்திய பிரதேசம் போன்ற முதல் 10 மாநிலங்களை பற்றி பேச மறுப்பது ஏன்? சந்திரபாபு நாயுடு ஆட்சியில் இருந்தபோது ஏன் மகளிர் போலீஸ் நிலையங்களை அமைக்கவில்லை. பவன் கல்யாண், சந்திரபாபு நாயுடு ஆகியோர் மகளிர் ஆணையத்தை குறி வைத்து பேசுவதை நிறுத்த வேண்டும். பவன் கல்யாணுக்கு நான் பகிரங்க சவால் விடுகிறேன். பெண்கள் முன்னிலையில் அவர் என்னுடன் விவாதத்திற்கு வர தயாரா?. பவன் கல்யாண் நடித்த மோசமான படங்களால் இளம்பெண்கள் பாதிக்கப்படுகிறார்கள். இவ்வாறு அவர் கூறினார்.

# மின்சாரம் தாக்கி நெல்லை சிறுமி மரணம் உறவினர்கள் மறியல் போலீஸாருடன் தள்ளுமுள்ளு

திருநெல்வேலி , ஜூலை. 29-
வண்ணார்ப்பேட்டையில் மாநகராட்சி மோட்டார் அறையில் மின்கசிவு காரணமாக 7 வயது சிறுமி உயிரிழந்த சம்பவத்தில் மாநகராட்சியைக் கண்டித்து, உறவினர்கள் சாலை மறியலில் ஈடுபட்டனர்.

திருநெல்வேலி வண்ணார்ப்பேட்டை அம்பேத்கர் நகர் வடக்குத் தெருவில் 100-க்கும் மேற்பட்ட குடியிருப்புகள் உள்ளன. இப்பகுதியைச் சேர்ந்த சக்திவேல் - சோனியா தம்பதியின் மகள் சத்யா உடையார்பட்டி பள்ளியில் 3-ம் வகுப்பு படித்து வந்தார். உடல் நலக்குறைவு காரணமாக புதன்கிழமை பள்ளிக்கு செல்லவில்லை.

தனது சகோதரனுடன் அப்பகுதியில் விளையாடிய சத்யா, கை கழுவ அங்குள்ள மாநகராட்சி மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியுடன் கூடிய குழாய்க்கு சென்றுள்ளார்.



குழாயில் தண்ணீர் வராத நிலையில், அருகிலுள்ள மோட்டார் அறையின் சுவரில் பரவியிருந்த மின்கசிவு தாக்கி உயிரிழந்தார். சிறுமியின் உடலை அவர்களது உறவினர்கள் நேற்று பெற்றுக்கொள்ள மறுத்தனர்.

மோட்டார் அறையைப் பராமரிக்காத மாநகராட்சியின் அலட்சியத்தைக் கண்டித்தும், உரிய நிவாரணம் கேட்டும் திருநெல்வேலி - மதுரை சாலையில் மறியலில் ஈடுபட்டனர். போக்குவரத்து பாதிக்கப்பட்டது. மறியலில் ஈடுபட்டவர்களை அங்கிருந்து போலீஸார் அப்புறப்படுத்த முயன்றனர். அப்போது அவர்களுக்கும், போலீஸாருக்கும் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது.

அவர்களிடம், பாளையங்கோட்டை எம்.எல்.ஏ அப்துல் வகாப், மாநகராட்சி அதிகாரிகள் மற்றும் போலீஸார் பேச்சுவார்த்தை நடத்தினர். கோரிக்கைகள் தொடர்பாக அரசின் கவனத்துக்கு கொண்டு சென்று நடவடிக்கை எடுப்பதாக அதிகாரிகள் உறுதி தெரிவித்தனர். இதையடுத்து மறியல் கைவிடப்பட்டது.

# மணிப்பூரை கண்டு ஏன் பயம்? உங்கள் எம்.பி.க்களை அனுப்ப வேண்டியதுதானே

**மேற்கு வங்காளம் , ஜூலை. 29-**
மணிப்பூர் விவகாரத்தில் எதிர்க்கட்சிகள் மக்களவையில் நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வந்துள்ளன. மத்திய அரசு சிபிஐ விசாரணை கேட்டுள்ளது. எதிர்க்கட்சி எம்.பி.க்கள் இன்று மற்றும் நாளையும் இரண்டு நாட்கள் மணிப்பூர் செல்ல இருக்கிறார்கள். பிரதமர் மோடி மணிப்பூர் பற்றி பேச மறுத்து வருகிறார். இதுவரை மணிப்பூருக்கு



செல்லவில்லை.

இந்த நிலையில் திரிணாமுல் காங்கிரஸ் தலைவரும், மேற்கு வங்காள மாநில முதல்வருமான மம்தா பானர்ஜி கூறுகையில் ''நீங்கள் (பா.ஜனதா) இன்னும் ஆறு மாதம்தான் இருக்கப் போகிறீர்கள். மணிப்பூரை கண்டு ஏன் பயப்படுகிறீர்கள்?. உங்களுடைய எம்.பி.க்களை அனுப்புங்கள். யார் பொறுப்பு என்று அவர்கள் சொல்லட்டும். நீங்கள் பணத்தை எண்ணிக் கொண்டிருக்கிறீர்கள். மணிப்பூர், நாகாலாந்து எரிந்து கொண்டிருக்கின்றன. காஷ்மீர் எரிந்துமுடிந்துவிட்டது. இந்தியா கூட்டணியின் எம்.பி.க்கள் மணிப்பூர் செல்ல இருக்கின்றனர். நான் மணிப்பூர் செல்ல அனுமதி கேட்டேன். எனக்கு அனுமதி மறுக்கப்பட்டது" என்றார்.

# மேற்கு வங்கத்தில் போன் வாங்க 8 மாத குழந்தையை விற்ற பெற்றோர் கைது

**கொல்கத்தா , ஜூலை. 29-**
*மேற்கு வங்க மாநிலத்தை சேர்ந்த தம்பதியர்,ஸ்மார்ட்போன் வாங்குவதற்காக தங்களது 8 மாத குழந்தையை விற்றுள்ளனர். இந்தச் சம்பவம் அந்த மாநிலத்தின் வடக்கு 24 பர்கனா மாவட்டத்தில் நடந்துள்ளது.*

*தம்பதியர் அடிக்கடி வெளியூர் சென்று வருவதும், கையில் புதிய போனை வைத்திருந்ததையும் அவர்கள் வசித்து வந்த பகுதியை சேர்ந்த அக்கம் பக்கத்தினர் கவனித்து காவல் துறையில் தெரிவித்துள்ளனர். அதன் பேரில் போலீஸார் மேற்கொண்ட விசாரணையில் குழந்தையை விற்றது தெரியவந்துள்ளது. இந்த செயலை செய்த தம்பதியரான ஜெயதேவ் கோஷ் மற்றும் சதி தற்போது போலீஸ் கஸ்டடியில் உள்ளனர். இவர்களுக்கு 7 வயதில் ஒரு மகள் இருப்பதாகவும் தகவல்.*

*அந்த தம்பதியரிடம் பணம் கொடுத்து குழந்தையை வாங்கிய பிரியங்கா என்பவரையும் போலீஸார் கைது செய்துள்ளனர். அவரிடமும் வாக்குமூல பெறப்பட்டுள்ளது. "முதலில் குழந்தை தாய் மாமா வீட்டில் இருப்பதாகஎனதுமகனும்,*




*மருமகளும்தெரிவித்தனர். பின்னர் தான் குழந்தை பணத்துக்காக விற்பனை செய்யப்பட்ட தகவலை நான் அறிந்து கொண்டேன். அந்த பணத்தில் தான் அவர்கள் பல்வேறு இடங்களுக்கு சென்றுள்ளனர்" என ஜெயதேவ் கோஷின் தந்தை காமாய் சவுத்ரி தெரிவித்துள்ளார். தன்னைஉடல்ரீதியாகவும், மன ரீதியாகவும் அவர்கள் இருவரும் புண்படுத்தியதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.*

*"ஜெயதேவும், அவரது மனைவி சதியும் குழந்தையை ரூ.2 லட்சத்துக்கு விற்பனை செய்துள்ளனர். அந்த பணத்தில் புதிய போன் மற்றும் பயணம் என உலா வந்தனர். குழந்தை இல்லாமல் அவர்கள் மாற்றத்தை கண்டு போலீஸில் தெரிவித்தோம். அவர்கள் மேற்கொண்ட விசாரணையில் இது தெரியவந்தது" என லட்சுமி என்பவர் தெரிவித்துள்ளார். இவர் ஜெயதேவ் வீட்டுக்கு அருகில் வசித்து வருபவர் என்பது குறிப்பிடத்தக்கது.*

# ரூ.2000 கரோனா நிவாரணத் தொகையுடன் புன்னகையால் வைரலான வேலம்மாள் பாட்டி காலமானார் முதல்வர் ஸ்டாலின் இரங்கல்

சென்னை , ஜூலை. 29-
ரூ.2000 கரோனா நிவாரணத் தொகையைப் பெற்றுக் கொண்டு புன்னகை செய்த புகைப்படம் வைரலானதால் பிரபலமடைந்த வேலம்மாள் பாட்டி காலமானார். அவரது மறைவுக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக முதல்வர் ஸ்டாலின் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், "கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த வேலம்மாள் பாட்டி மறைந்தார் என்ற செய்தியறிந்து வருத்தமுற்றேன். கொரோனா பேரிடர் கால நிவாரணமாகக் கழக அரசு வழங்கிய நிவாரணத் தொகையைப் பெற்ற போது, மக்களின் எண்ணங்களைப் பிரதிபலித்த அவரது புன்னகை வழியாக அவர் என்றும் நம்மிடையே



நிலைத்திருப்பார். அவரது பிரிவால் வாடும் அவரது குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

கடந்த 2022 ஆம் ஆண்டு, திமுக ஆட்சி அமைந்தவுடன் குடும்ப அட்டைதாரர்களுக்கு ரூ.2000 மற்றும் மளிகைப் பொருட்கள் கரோனா நிவாரணத் தொகை வழங்கப்பட்டது. அப்போது, கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் அடுத்த கீழகலுங்கடி பகுதியைச் சேர்ந்த 90 வயது மூதாட்டியை கன்னியாகுமரியைச் சேர்ந்த புகைப்படக் கலைஞர் ஒருவர் புகைப்படம் எடுத்திருந்தார். இந்தப் புகைப்படம் சமூக வலைத்தளங்களில் வைரலானது. இதன்மூலம் வேலம்மாள் பாட்டியும் பிரபலமானார்.

அந்தச் சம்பவத்துக்கு பின்னர் முதல்வர் ஸ்டாலின் நாகர்கோவில் வந்திருந்தபோது அவரிடம் தனக்கு ஒரு வீடு ஒதுக்குமாறு மூதாட்டி வேண்டுகோள் விடுத்தார். அதனை ஏற்ற முதல்வர் அஞ்சுகிராமம் அருகே பால்குளத்தில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்துக்கு சொந்தமான குடியிருப்பில் வேலம்மாள் பாட்டிக்கு வீடு ஒதுக்கீடு செய்தார். அது அவரிடம் ஒப்படைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# 11 பெண் துப்புரவு பணியாளர்கள் வாங்கிய லாட்டரி சீட்டுக்கு ரூ.10 கோடி பம்பர் பரிசு

**திருவனந்தபுரம் , ஜூலை. 29-**
கேரளா மாநிலத்தில் அந்த மாநில அரசு சார்பில் லாட்டரி விற்பனை செய்யப்படுகிறது. பண்டிகை காலங்களில் விற்பனை செய்யப்படும் லாட்டரி சீட்டுகளுக்கு பம்பர் பரிசு கோடிகள் மற்றும் லட்சங்களில் வழங்கப்படும். இதனால் கேரள மாநில மக்கள் மட்டுமின்றி, அங்கு சுற்றுலா செல்லக்கூடிய தமிழக மற்றும் பிற மாநில சுற்றுலா பயணிகளும் கேரள லாட்டரி சீட்டுகளை வாங்குவார்கள். இந்நிலையில் பருவமழைக்கால லாட்டரி சீட்டுகள் விற்பனை நடந்து வந்தது. அதில் பம்பர் பரிசாக ரூ.10 கோடி வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. மேலும் இரண்டாம் பரிசு பெறுபவர்களுக்கும் கோடிக்கணக்கில் பரிசு அறிவிக்கப்பட்டது. பருவமழைக்கால லாட்டரி விற்பனை திட்டத்தில் விற்பனைக்காக 27 லட்சம் லாட்டரி டிக்கெட்டுகள் அச்சிடப்பட்டன. ஒரு டிக்கெட் ரூ.250-க்கு விற்பனை செய்யப்பட்டது. பம்பம் பரிசு 10 கோடி ரூபாய் என்பதால் லாட்டரி சீட்டுகள் விற்பனை விறுவிறுப்பாக நடந்து



வந்தது. இந்நிலையில் பருவ மழைக்கால லாட்டரி சீட்டு குலுக்கல் முடிவுகள் ஜீலை (26-ந்தேதி) வெளியிடப்பட்டது.

அதில் எம்.பி. 200261 என்ற எண் கொண்ட லாட்டரி சீட்டுக்கு பம்பர் பரிசான ரூ.10 கோடி விழுந்தது. பாலக்காட்டில் விற்பனையான அந்த லாட்டரி சீட்டை வாங்கியவர்கள் யார் என்பது தெரியாமல்இருந்தது. இந்நிலையில் அந்த லாட்டரி சீட்டை பெண் துப்புரவு பணியாளர்கள் 11 பேர் சேர்ந்து வாங்கியது தெரியவந்தது. மலப்புரம் மாவட்டம் பரப்பனகாடி நகராட்சியில் துப்புரவு பணியாளர்களாக பணிபுரிந்து வரும் அவர்கள், சம்பவத்தன்று ஒரு இடத்தில் குழுவாக நின்று கொண்டிருந்தனர். அப்போது அங்கு வந்த ஒருவர், லாட்டரி சீட்டு வாங்குமாறு கூறியிருக்கிறார். ஆனால் ஒரு டிக்கெட்டின் விலை 250 ரூபாய் என்று கூறினார். இதனைக்கேட்ட துப்புரவு பணியாளர்கள் தங்களிடம் அவ்வளவு பணம் இல்லை என்று தெரிவித்துள்ளனர். இதனால் அவர்கள் அனைவரும் இணைந்து ஒரே ஒரு லாட்டரி டிக்கெட் வாங்க முடிவு செய்தனர். அதன்படி 9 பேர் தலா 25 ரூபாயும், ஒருவர் மட்டும் 50 ரூபாயும் போட்டு லாட்டரி டிக்கெட் வாங்கினர்.

இறுதியில் அவர்களுக்கே பம்பர் பரிசான 10கோடி ரூபாய் விழுந்துவிட்டதை அறிந்து அதிர்ச்சியில் உறைந்து போனார்கள். பம்பர் பரிசை வென்ற அவர்களுக்கு, நகராட்சி அதிகாரிகள் மற்றும் சக பணியாளர்கள் வாழ்த்து தெரிவித்தனர். இந்த பெண் துப்புரவு பணியாளர்கள் குழு, இதற்கு முன் ஓணம் பம்பர் லாட்டரியில் 7,500 ரூபாய் வென்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஜார்க்கண்டில் பெண்ணை அரை நிர்வாணமாக்கி மரத்தில் கட்டி வைத்து தாக்கிய கொடூரம்

ஜார்க்கண்ட் , ஜூலை. 29-
மணிப்பூரில் இரண்டு பெண்கள் நிர்வாணமாக அழைத்துச் செல்லப்பட்ட கொடூர சம்பவம் நடைபெற்றதில் இருந்து, பெண்களுக்கு எதிராக பல்வேறு மாநிலங்களில் நடைபெறும் கொடுமைகள் குறித்த செய்திகள் வெளிவந்த வண்ணம் உள்ளன. அந்த வகையில் ஜார்க்கண்டில் ஏறக்குறைய அரை நிர்வாணமாக்கப்பட்டு ஒரு பெண் தாக்கப்பட்ட சம்பவம் நடைபெற்றுள்ளது.

ஜார்க்கண்ட் மாநிலம் கிரிதிஹ் மாவட்டத்தில் உள்ள சரியா காவல் நிலையத்திற்கு உட்பட்ட பகுதியில் வசித்து வரும் 26 வயது பெண், ஒருவருடன் தகாத உறவு வைத்திருந்ததாக தெரிகிறது. புதனிரவு, பெண்ணுடன் தகாத உறவு வைத்திருந்த நபர், மேலும் மூன்று பேருடன் சேர்ந்து அந்த பெண்ணை மரத்தில் கட்டி வைத்து தாக்கியுள்ளனர். மேலும், அவரது ஆடையை கிழித்துள்ளனர். ஏறக்குறைய அரை நிர்வாணத்துடன் இரவு முழுவதும் மரத்தில் கட்டி வைக்கப்பட்டி ருந்துள்ளார்.

இதுகுறித்து தகவல் அறிந்த போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று அந்த பெண்ணை மீட்டுள்ளனர். இந்த சம்பவத்தில் ஈடுபட்ட நான்கு பேரையும் கைது செய்துள்ளனர். மீட்கப்பட்ட பெண் சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். பாதிக்கப்பட்ட பெண் இந்த சம்பவம் குறித்து கூறுகையில் "நான் வீட்டில் இருக்கும்போது, வெளியே வரும்படி போன் செய்தனர். நான் வெளியே வந்தபோது, இரண்டு மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள், என்னை வலுக்கட்டாயமாக ஆளில்லா இடத்திற்கு கொண்டு சென்று தாக்கினர். பின்னர் என்னுடைய ஆடையைகிழித்து மரத்தில் கட்டி வைத்தனர்" எனத் தெரிவித்துள்ளார். மணிப்பூரைத் தொடர்ந்து ஜார்கண்டிலும் பெண்களுக்கு எதிரான வன்கொடுமை அரங்கேறி இருப்பது போலீசார் விசாரணையில் தெரியவந்துள்ளது பரபரப்பு ஏற்படுத்தி இருக்கின்றது.



காரைக்கால் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் நேற்று காரைக்காலில் அமைந்துள்ள ஜவஹர் நவோதயா வித்யாலயா பள்ளிக்கு சென்ற ஆட்சியர் மாணவர்களுடன் கலந்துரையாடினார். தற்போதைய காலக்கட்டத்தில் கல்வி மிகவும் அவசியமானது என்றும் கல்விதான் அழியாத செல்வம் என்றும் நீங்கள் வாழ்க்கையில் முன்னேற அடிப்படை காரணம் கல்விதான் என்றும் என்னைப் போன்ற பெரிய நிலைக்கு நீங்கள் வர வேண்டும் என்றால் நன்கு படித்து வாழ்க்கையில் முன்னேற வேண்டும் எனவும் இதன் மூலம் தங்கள் தாய் தந்தையருக்கும் படிக்கும் பள்ளிக்கும் பெருமை சேர்க்க வேண்டும் எனவும் மாணவர்களை கேட்டுக் கொண்டார். மேலும் மாணவர்களை ஊக்கப்படுத்திய மாணவர்களின் பல்வேறு கேள்விகளுக்கு பதில் அளித்தார். மேலும் பள்ளியின் பல்வேறு இடங்களில் மரக்கன்றுகளையும் நட்டார். நிகழ்வில் பள்ளி முதல்வர் மற்றும் ஆசிரியர்கள் மாணவர்கள் உடன் இருந்தனர்.

# காரைக்காலில் தேசிய கல்விக் கொள்கை 3 ம் ஆண்டு நிறைவு விழா கொண்டாட்டம்



காரைக்கால், ஜூலை.29: காரைக்கால் மாவட்டம், ராயன்பாளையம் பகுதியில் ஒன்றிய அரசின் கல்வித்துறையின் கீழ் நவோதய வித்யாலயா பள்ளி இயங்கி வருகிறது. இங்கு ஒன்றிய அரசால் தேசிய கல்விக் கொள்கை 2020-ம் ஆண்டு அறிமுகப் படுத்தப்பட்டு,ஜூலை 29-ம்தேதியுடன் 3 ஆண்டுகள் நிறைவடைவதை கொண்டாடும் வகையில் பல்வேறு நிகழ்ச்சிகள் ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளனர்.இதன் விளக்க கூட்டம் நேற்று முன்தினம் பள்ளி வளாகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் ஜவஹர் நவோதயா வித்யாலயா முதல்வர் நந்தகுமார், கேந்திரிய வித்யாலயா பள்ளி பொறுப்பு முதல்வர் ஸ்ரீராமன் மற்றும் ஜவகர் நவோதயா வித்யாலயா முதுநிலை இயற்பியல் ஆசிரியர் சங்கர் மற்றும் ஆசிரியர்கள் பலர் கலந்து கொண்டனர்.

கேந்திரிய வித்யாலயா பள்ளி முதல்வர் நந்தகுமார் ஒலி ஒளி விளக்கக்காட்சியின்மூலம் பள்ளியில்பின்பற்றப்பட்ட அனைத்து அனுபவக் கற்றல் முறைகளையும் விரிவாக விளக்கினார். இதில் பயிற்சி,கலை ஒருங்கிணைந்த கல்வி மற்றும் விளையாட்டு ஒருங்கிணைந்த கல்வி,கதை சொல்லல் அடிப்படையிலான கற்பித்தல், ஒவ்வொரு பாடத்திலும் நிலையான கற்பித்தல்மற்றும்பல்வேறு பாடங்களுக்கிடையேயான உறவுகளின் ஆய்வுகள் பற்றி விளக்கினர்.

## செம்பனார்கோவில் கண்டியன் குளம்

# அருள்மிகு ஸ்ரீ மாரியம்மன் ஆலயத்தில் ஆடி வெள்ளியை முன்னிட்டு 22 ஆம் ஆண்டு பால்குட அபிஷேக விழா




தரங்கம்பாடி, ஜூலை- 29: மயிலாடுதுறை மாவட்டம், தரங்கமபாடி தாலுக்கா, செம்பனார்கோவிலில் புகழ்வாய்ந்த கண்டியன் குளம் அருள்மிகு ஸ்ரீ மாரியம்மன் ஆலயம் உள்ளது. வேண்டுதலை நிறைவேற்றி தரும் மாரியம்மனுக்கு சமையல் கலைஞர்கள் ஆண்டுதோறும்ஆடிமாதம் 2 வது வெள்ளிக்கிழமை பால்குடம் எடுத்து நேத்திக்கடன் செய்து வழிபாடு நடத்துவது வழக்கம்.

அந்த வகையில் செம்பனார்கோவில் திருச்சம்பள்ளி கடிச்சம்பாடி பகுதியைச் சேர்ந்த சமையல் கலைஞர்கள் சார்பாக 22-ஆம் ஆண்டு பால்குட அபிஷேக விழா இன்று நடைபெற்றது.

மேலமுக்கூட்டு விநாயகர் ஆலயத்தில் இருந்து அலங்கரிக்கப்பட்ட சக்திகரகம், பால்குடம் அலகுகாவடி எடுத்து மேளதாள வாத்தியங்கள் முழங்க காளி ஆட்டங்களுடன் வீதியுலாவாக நூற்றுக்கணக்கான பக்தர்கள் பக்தி பரவசத்துடன் ஆலயம் வந்தடைந்தனர் 16 அடி அழகு குத்தியும் பக்தர்கள் நேர்த்திக்கடன் செலுத்தினார். ஸ்ரீமாரியம்மனுக்கு பால் அபிஷேகம் மற்றும் சிறப்பு அபிஷேகம் செய்யப்பட்டு மகா தீபாராதனை செய்யப்பட்டது. இதில் திரளான பக்தர்கள் கலந்துகொண்டு வழிபாடு நடத்தினர்.

## வாலாஜாபாத் அருகே ஊத்துக்காடு ஊராட்சியில்

# ஆக்கிரமிப்புகளை அகற்றி கால்வாய் சீரமைக்க பொதுமக்கள் கோரிக்கை



வாலாஜாபாத், ஜூலை,29 காஞ்சிபுரம் மாவட்டம்வாலாஜாபாத் அடுத்த ஊத்துக்காடு கிராமத்தில் உலகபிரசித்தி பெற்ற ஸ்ரீ எல்லையம்மன் ஆலயம் உள்ளது.

இங்கு, சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு, விழுப்புரம் உள்ளிட்ட தமிழகத்தின் பிற மாவட்டங்களில் இருந்தும் ஏராளமான பக்தர்கள் வந்து சாமி தரிசனம் செய்து வழிபடுகின்றனர்.

இந்த ஆலயத்தின் அருகில் குடியிருப்புகள் முன்பு 30க்கும் மேற்பட்ட வணிக கடைகள் உள்ளது. அங்கே ஊராட்சி சொந்தமான பொது இடங்களை ஆக்கிரமித்து பலர் கடைகள் அமைத்துள்ளனர்.

அதனால், ஆலயத்தின் அருகே கால்வாய் சீரமைக்கும் பணி கடந்த ஒரு மாதமாக கிடப்பில் போடப்பட்டுள்ளது. ஊராட்சி நிர்வாகத்தினர், ஆக்கிரமிப்பு செய்து உள்ள இடத்தைகாலிசெய்யும்படி ஆக்கிரமிப்புளர்களிடம் நோட்டீஸ் வழங்கியும் இன்னும் சிலர் ஆக்கிரமிப்புகளை அகற்றாமல் உள்ளனர்.

அதன் காரணமாக, மழையின் போது கால்வாய்களுக்கு தண்ணீர் செல்லாமல் கோவிலின் முன்னர் ஆங்காங்கே தண்ணீர் தேங்கி சேரும் சகதியுமாக காட்சியளிக்கிறது.

அதனால் ஆலயத்திற்கு வரும் பக்தர்கள் அந்த சேற்று தண்ணீர் அருகில் அமர்ந்து பொங்கல் வைத்து நேர்த்தி கடன் செலுத்தி சிரமப்படுவதால் முகம் சுளிக்கின்றனர்.

எனவே, ஆக்கிரமிப்புகளை அகற்றி கால்வாய்களை சீரமைக்க அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## கூவத்தூர் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு

# கே.எஸ்.ஆர்.தலைமையில் அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டது



செய்யூர்:ஜூலை-29 செங்கல்பட்டு மாவட்டம்,இலத்தூர் ஊராட்சி ஒன்றியம்,கூவத்தூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் உள்ளசிலவகுப்பறைகளில் மின் விசிறிகள் இல்லாமல் இருக்கும் தகவலை பள்ளியின் தலைமையாசிரியர் மூலம் தகவல் தெரியவந்தது.

உடனே இலத்தூர் ஒன்றிய முன்னாள் பெருந்தலைவரும், இலத்தூர் வடக்கு ஒன்றிய செயலாளர் கே.எஸ்.இராமச்சந்திரன் முதற்கட்டமாக ஐந்து வகுப்பறைகளுக்கு தேவையான மின்விசிறிகளை வழங்கிட வேண்டுமென்ற ஆலோசனையின் படி இலத்தூர் ஒன்றிய திமுக இளைஞர் அணி துணை அமைப்பாளர் கே.எஸ். ஆர்.கார்த்திகேயன் கூவத்தூர் அரசு மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியரிடம் வழங்கினார்.

மற்றும் திமுக காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை தலைவர் இரா. குப்புசாமி பள்ளி மாணவர்களுக்கு அறிவுரை வழங்கியதோடு, பள்ளிக்கு தேவையான உதவிகளை தொடர்ந்து செய்து தருவதாகவும் சிறப்புரையாற்றினார்.

உடன் இலத்தூர் ஒன்றிய ஆதிதிராவிடர் அமைப்பாளர் கோவிந்தசாமி கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## கந்தர்வகோட்டை அருகே அரசுப்பள்ளியில்

# உலக இயற்கை வள பாதுகாப்பு தினம் மரக்கன்றுகள் நட்டு கடைபிடிப்பு





கந்தர்வகோட்டை, ஜீலை.29- புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை ஒன்றியம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் உலக இயற்கை வள பாதுகாப்பு தினம் கடைபிடிக்கப்பட்டது. இந்நிகழ்வில் மருங்கூரணி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியரும் புதுக்கோட்டை மாவட்ட இணைச் செயலாளர் துரை அரசன் தலைமை வகித்து வரவேற்று பேசினார், பள்ளி வளாகத்தில் மரக்கன்றுகள் நடப்பட்டன.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட தமிழ்நாடு அறிவியல் இயக்க கந்தர்வகோட்டை வட்டாரத் தலைவர் ரகமதுல்லா உலக இயற்கை வள தினம் குறித்து பேசியதாவது,

இயற்கை வளங்களை பாதுகாப்பது ஒவ்வொரு தனிப்பட்ட மனிதரின் கடமையாகும், வருங்காலதலைமுறைக்கு தொழில்நுட்பம் பொருட்செல்வம். ஆகியவற்றைவிட, இயற்கை வளங்களையும், ஆரோக்கியமான சுற்றுச்சூழலையும் விட்டுச்செல்வதே சிறந்தது என்றுபேசினார். நிறைவாக துளிர் திறனறிவுத் தேர்வில் கலந்து கொண்ட மாணவர்களுக்கு பாராட்டு சான்றிதழ் வழங்கிபாராட்டப் பட்டது, நிறைவாக ஆசிரியை ராமலெட்சுமி நன்றி கூறினார்.



மின் கம்பம் அறுந்து விழுந்து கால் முறிவு ஏற்பட்டு அரசு மருத்துவத்தில் சிகிச்சை பெற்று வரும் விளையாட்டு வீரர் பரிதி விக்னேஷ்வரனை தி.மு.க. மாநகர் மாவட்ட செயலாளர் தளபதி எம்.எல்.ஏ. நேரில் சந்தித்து ரூபாய் ஒரு லட்சம் உதவி தொகையை வழங்கினார். உடன் மாவட்டத் துணைச் செயலாளர் ஜே.மூவேந்தரன், எஸ். வி.சுதன் பழங்காநத்தம் பகுதி செயலாளர் மற்றும் திமுக தோழர்கள் உள்ளனர்.

## கும்மிடிப்பூண்டியில் ரூ.68 லட்சத்து 90 ஆயிரம் தொகையில்

# 26 ஊராட்சிகளுக்கு மூன்று சக்கர மின்கலன் வண்டிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது





ஊத்துக்கோட்டை, ஜூலை29- திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி ஒன்றியம் அயநல்லூர், சுண்ணாம்பு குளம், பல்லவாடா, சிறுபுழல்பேட்டை, ஏகுமதுரை, ஆத்துப்பாக்கம், ஆரம்பாக்கம், செதில்பாக்கம், எளாவூர், ஏடுர், ஏனாதிமேல்பாக்கம், குருவராஜகண்டிகை, கரடிபுத்தூர், கொள்ளானூர், மங்கலம், மாதர்பாக்கம், நேமளூர், பாதிரிவேடு, பெத்திக்குப்பம், போந்தவாக்கம், தேர்வழி, தேர்வாய் உள்ளிட்ட 26 ஊராட்சிகளுக்கு தலா ரூ.2 லட்சத்தி 65 ஆயிரம் தொகையில் 15-ம் நிதி குழு மானியம் மற்றும் தூய்மை பாரத இயக்கம் திட்டத்தின் கீழ் மொத்தம் ரூ.68 லட்சத்து 90 ஆயிரம் தொகையில் மூன்று சக்கர மின்கலன் வண்டிகள் வழங்கும் நிகழ்ச்சி நேற்று காலை கும்முடிபூண்டி வட்டார வளர்ச்சி அலுவலக வளாகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு, கும்மிடிப்பூண்டி ஒன்றிய பெருந்தலைவர் கே.எம்.எஸ்.சிவக்குமார் தலைமை தாங்கினார். கும்மிடிப்பூண்டி ஒன்றிய துணைப்பெருந்தலைவர் மாலதி குணசேகரன், பொதுக்குழு உறுப்பினர் பா.சே.குணசேகரன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சாந்தி,ரவி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில், சிறப்பு அழைப்பாளர்களாக திருவள்ளூர் கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும், கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜே.கோவிந்தராஜன் கலந்து கொண்டு 26 ஊராட்சிகளுக்கு மூன்று சக்கர மின்கலன் வண்டிகளை வழங்கி சிறப்புரை ஆற்றினார்.

இந்நிகழ்ச்சியில், கும்முடிபூண்டி ஒன்றிய திமுக செயலாளர் மு.மணிபாலன், ஊராட்சி மன்ற தலைவர்கள்கீழ்முதலம்டு கே.ஜி.நமச்சிவாயம், சுண்ணாம்புகுளம் ரவி, எகுமதுரை பிரியாமகேந்திரன், மாவட்ட கவுன்சிலர்கள் ராமஜெயம், பல்லவாடா சாரதாம்மாள்முத்துசாமி மற்றும் மாவட்ட, ஒன்றிய, கிளைக்கழக நிர்வாகிகளும், அணிகளின் அமைப்பாளர்களும், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# செம்பனார்கோவில் தாமரை மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளியில் விளையாட்டுப் போட்டி




தரங்கம்பாடி, ஜூலை- 29: மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி தாலுகா செம்பனார்கோவிலில் உள்ள தாமரை சிபிஎஸ்சி ஸ்டேட் போர்டு ஹயர் செகண்டரி மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளியில் 2023 ஆம் ஆண்டுக்கான விளையாட்டுப் போட்டி விழா பள்ளி தாளாளர் என் எஸ் குடியரசு தலைமையில் நடைபெற்றது.

விளையாட்டுபோட்டி விழாவில் அகில பாரதிய மீனவர் பேரவை மாநில பொருளாளர் நடேசன் நாட்டார் பங்கேற்று துவக்கி வைத்தார். இதில் மடத்துக்குப்பம் பஞ்சாயத்தார் செங்குட்டுவன், நடராஜன், காளகஸ்திநாதபுரர் ஊராட்சி மன்றதுணைத் தலைவர்சரவணன்மற்றும் தாமரை மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளியின் நிர்வாகிகள் பள்ளியின் தலைமை ஆசிரியர்கள் பெற்றோர்கள் மாணவர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

விளையாட்டுவிழாவில் மாணவர்களுக்கான பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றது. குறிப்பாக சிறுவர்களுக்கு ஓட்டப்பந்தயம், வளையம் எடுத்து ஓட்டம், லெமன் ஸ்பூன், தண்ணீர் சேகரிப்பு விளையாட்டு உள்ளிட்ட பல்வேறு போட்டிகள் பள்ளி வளாக மைதானத்தில் நடைபெற்றது. பெற்றோர்கள் பங்கேற்று தங்கள் குழந்தைகளை உற்சாகப்படுத்தினர். ஒவ்வொருபோட்டியிலும் வெற்றிபெற்ற குழந்தைகள் மாணவர்களுக்கு பள்ளி நிர்வாகம் சார்பில் பரிசு மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது. இதில் மாணவர்கள் ஆர்வத்துடன் விளையாடினர்.

# சென்னை திருவொற்றியூரில் வட மாநில லாரி ஓட்டுநரை கத்தியால் தாக்கி செல்போன் பறிப்பில் ஈடுபட்ட மூன்று இளைஞர்கள் கைது



சென்னை,ஜூலை,29 சென்னை திருவொற்றியூர் எண்ணூர் விரைவு சாலை எம். ஆர். எப். பூங்கா அருகே வட மாநில கண்டெய்னர் லாரி ஓட்டுனர் கியாசுதீன் என்பவர்லாரியை ஓரமாக நிறுத்தி வைத்து விட்டு சிறுநீர் கழிப்பதற்காக கடற்கரை அருகே சென்று கொண்டிருந்தார் அப்பொழுது 3 இளைஞர்கள் கண்டெய்னர் லாரி ஓட்டுநர் கியாசுதீன் என்பவரை பின் தொடந்து கத்தியால் தாக்கி வெட்டி விட்டு செல்போனை பறித்துக் கொண்டு ஆட்டோவில் ஏறி தப்பி சென்றுள்ளனர்.

இதுகுறித்து லாரி ஓட்டுனர் கியாசுதீன் திருவொற்றியூர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார் புகாரின் பெயரில் போலீசார் வழக்கு பதிவு செய்தனர்.

வடக்கு மண்டல இணை ஆணையர் ரம்யபாரதி உத்தரவின் பெயரில் வண்ணாரப்பேட்டை காவல்துணை ஆணையர், பவன் குமார் ரெட்டி மேற்பார்வையில் திருவொற்றியூர் காவல் உதவி ஆணையர் முகமது நாசர் தலைமையில் திருவொற்றியூர் குற்றப்பிரிவு ஆய்வாளர் கோபி , தனிப்படை உதவி ஆய்வாளர் ராமச்சந்திரன் சிறப்பு உதவியாளர் மணிமாறன் ரமேஷ் தலைமை காவலர் தேவசீலன் முதல் நிலை காவலர் தினேஷ் ஆகியோர் தனிப்படை போலீசார்

சம்பவம் நடைபெற்ற இடத்தில் பொருத்தப்பட்டிருந்த சிசிடிவி கேமிராவை காட்சிகளை கைப்பற்றி ஆய்வு செய்தனர்.

அதில் மூன்று இளைஞர்கள் ஆட்டோவில் ஏறி தப்பிச் சென்றது தெரியவந்தது ஆட்டோ நம்பரை வைத்து ஓட்டுனரை பிடித்து விசாரணை செய்த போலீசார் மூனறு இளைஞர்கள் காசிமேடு பகுதியில் இறங்கி சென்று விட்டதாக தெரிவித்தனர்

பின்னர் அவர்கள் அணிந்திருந்த சட்டைகளை வைத்து தனிப்படை போலீசார் விசாரணையில் இறங்கினர் அப்பொழுது காசிமேடு கடற்கரைப் பகுதியில் பதுங்கி இருந்த எர்ணாவூர் சேர்ந்த செல்வக்குமார் என்கின்ற பால்வாடி, காசிமேட்டை சேர்ந்த கோடீஸ்வரன் என்கின்ற சின்னத்தம்பி, தண்டையார்பேட்டை சேர்ந்த கார்த்திக் ஆகியோரை தனிப்படை போலீசார் பிடித்து இரண்டுசெல்போன்களை பறிமுதல் செய்யப்பட்டு. அவர்களை காவல் நிலையத்தில் அழைத்து வந்து விசாரணை செய்து வழக்கு பதிவு செய்து நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி சிறையில் அடைத்தனர்.

# திருவரங்குளம் கைக்குறிச்சி ஸ்ரீபாரதி மகளிர் பொறியியல் கல்லூரியில் 14-வது ஆண்டு விழா



திருவரங்குளம், ஜீலை.29-

கைக்குறிச்சி ஸ்ரீபாரதி மகளிர் பொறியியல் கல்லூரியில் 14-வது ஆண்டு விழா மிகச்சிறப்பாக நேற்று நடைபெற்றது. விழாவிற்கு நிறுவனங்களின் தலைவர் குரு.தனசேகரன் தலைமை தாங்கினார், தாளாளர் என். கனகராஜன், முதல்வர் சரவண.திலகவதி, நிர்வாக அறங்காவலர் அ.கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர், திருச்சிகட்டிட பொறியாளர். செண்பக ராஜ் தொடக்கவுரை யாற்றினார், விழாவில் சிறப்பு விருந்தினராக திருச்சி பெல் நிறுவனத்தின் முன்னாள் பொது மேலாளர் கோ.ம.ராஜேந்திரன் கலந்துகொண்டு பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கினார்.

முன்னதாக நடைபெற்ற ஓவியப் போட்டியில் ஆர்.ஜபார் நிஷா,எம்.ஆசிமா,வினாடி வினாப் போட்டியில் பி.பிரசன்னாதேவி, எம். ரோசம்மாள், கட்டுரைப் போட்டியில் எம். ராஜபிரபா, கே.கல்பனா, தொடர் ஓட்டம்,மற்றும் ஓட்டப் பந்தயத்தில் மஞ்சள நிற அணியும், குண்டு ஏறிதலில் பச்சை நிற அணியும் சிறப்பிபிடம் பெற்றனர்.ஒட்டு மொத்த கலை விழா கேடயத்தை முதலாமாண்டுமாணவிகள் பெற்றனர். விழாவிற்கான ஏற்பாடுகளை துறைத்தலைவர்கள் ஆர்.யோகேஸ்வரி, ஜி.சுகப்பிரியா, ஆர். பத்மராணி, வி.பிரியா மற்றும் உதவிப் பேராசிரியர்கள் செய்திருந்தனர், நிகழ்ச்சியில் மாணவிகள் குழுத்தலைவர் ஜெ.ரில்வானா பர்வீன் வரவேற்றார், முடிவில் எஸ்.குல்னாஷ்பாத்திமா நன்றி கூறினார்.

### கறம்பக்குடியில்

# மணிப்பூர் கலவரத்தை கண்டித்து மஜக ஆர்ப்பாட்டம்



கறம்பக்குடி, ஜூலை.29-


மனிதநேய ஜனநாயக கட்சியின் புதுக்கோட்டை மேற்கு மாவட்டம் சார்பாக கறம்பக்குடியில் மணிப்பூரில் நடைபெற்று வரும் கலவரத்தை கண்டித்தும், இரு பெண்களை பொதுவெளியில் நிர்வாணப்படுத்தி சீரழித்த கயவர்களை தூக்கிலிட வலியுறுத்தியும், கலவரத்தை அரசு துணை கொண்டு நடத்தும் மணிப்பூர் மற்றும் ஒன்றிய பாஜக அரசுகளை கண்டித்தும் கண்டன ஆர்ப்பாட்டம் நகரச் செயலாளர் ஆசை.அப்துல்லாஹ் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மாவட்ட செயலாளர் முகமது ஜான் பங்கேற்று கண்டன முழக்கங்களை எழுப்பினர், இந்நிகழ்வில் மாவட்ட துணைச் செயலாளர் லெட்சுமணன், ஒன்றியச் செயலாளர் சாகுல் ஹமீது, நகரப் பொருளாளர் அம்மன் ராமசாமி, நகர நிர்வாகிகள் ராஜா, சிக்கந்தர், ரபீக், சதாம், ரஃபியுதீன், சர்புதீன், நிஜாம் மைதீன், அர்சத், சிராஜ், மற்றும் கறம்பக்குடி ஜமாதார்கள், பொதுமக்கள் உள்ளிட்ட மஜக-வினர் பலர் கலந்து கொண்டனர்.



▶ தென்காசி தெற்கு மாவட்டச் செயலாளராக நியமிக்கப்பட்ட சுரண்டை ஜெயபாலன் சென்னை அண்ணா அறிவாலயத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலினை சந்தித்து வாழ்த்து பெற்றார் அருகில் பொதுச் செயலாளர் அமைச்சர் துரைமுருகன், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, வருவாய் மற்றும் பேரிடர் மீட்பு துறை அமைச்சர் கே கே.எஸ்.எஸ்.ஆர் ராமச்சந்திரன் ஆகியோர் உள்ளனர்.

# தென்காசி உதவி பேராசிரியருக்கு சிறந்த மருந்தியல் ஆசிரியர் விருது கான்பூரில் செப் 2ல் வழங்கப்படுகிறது



தென்காசி, ஜூலை.29-

தென்காசியை சேர்ந்த சத்யநாராயணன் தற்போது புனேயில் உள்ள பூனா காலேஜ் ஆப் பார்மசி என்னும் மருந்தியல் கல்லூரியில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறார். இவர் மருந்தியல் கல்வி கற்பிப்பது மட்டுமல்லாமல் மருந்தியல் துறை ஆராய்ச்சியில் 90க்கும் மேற்பட்ட ஆராய்ச்சி கட்டுரைகள் பிரசுரித்துள்ளார். பல்வேறு பன்னாட்டு மற்றும் உள்நாட்டு கருத்தரங்குகள், பல்கலைக் கழகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களில் 80 க்கும் மேற்பட்ட மருந்தியல் துறை கல்வி மற்றும் ஆராய்ச்சி சம்பந்தப்பட்ட உரைகள் நிகழ்த்தியுள்ளார். 06 மருந்தியல் கல்வி புத்தகங்கள் எழுதியுள்ளார். 06 ஆராய்ச்சி பட்டதாரிகள் மற்றும் 50க்கும் மேற்பட்ட முதுநிலைபட்டதாரிகளை உருவாக்கியுள்ள இவரிடம் பல மருந்தியல் ஆராய்ச்சி மாணவர்கள் தங்கள் ஆராய்ச்சி கல்வியைப் பயின்று வருகிறார்கள்.

இவரது கல்வி ஆராய்ச்சி மற்றும் மருந்தியல் துறையில் செய்த சாதனைகளை ஊக்குவிக்கும் வகையில் இந்திய மருந்தியல் ஆசிரியர்கள் அமைப்பு இந்த வருடத்தின் சிறந்த மருந்தியல் ஆசிரியர் விருதினை வழங்க உள்ளது, இந்த விருது செப்டம்பர் மாதம் இரண்டாம் தேதி கான்பூரில் நடக்க இருக்கும் இந்திய மருந்தியல் ஆசிரியர்கள் அமைப்பின் வருடாந்திர கருத்தரங்கில் வைத்து வழங்கப்படுகிறது.



▶ மதுரை விமான நிலையத்தில் உள்துறை அமைச்சர் அமித்ஷா மணிப்பூர் மாநிலத்தில் நடக்கும் ஜாதி வெறி, மதவெறியை கட்டுப்படுத்தாமல் தமிழ்நாடு பாஜக தலைவர் அண்ணாமலை நடை பயணத்தை துவக்கி வைக்க நேற்று வந்தை கண்டித்து தென்காசி மாவட்டம் கடையநல்லூர் இந்திய தேசிய காங்கிரஸ் மாநிலத் தலைவர் எஸ்.சி, எஸ்.டி பிரிவு எம்பி ரஞ்சன் குமார் தலைமையில், மாவட்ட மாநில மாணவர் காங்கிரஸ் தலைவர் சின்னத்தம்பி முன்னிலையில், நிகழ்ச்சியில்தென்காசி மாவட்டத் தலைவர் எஸ்.ஜி, எஸ் டி பிரிவு மாவட்டத் தலைவர் பி. இராமச்சந்திரன், மாவட்டத் துணைத் தலைவர் புஷ்பராஜ் திலகம், கடையநல்லூர் வட்டாரத் தலைவர் முத்துராஜ் என்ற கதாநாயகன், மகிளா காங்கிரஸ் தலைவி சேர்மக்கனி, மாவட்டச் செயலாளர் வேலம்மாள், தென்காசி நகர தலைவி மரியம் ஜீவி, நகரத் தலைவி ரதி பொதுக்குழு உறுப்பினர் உமா பாலன், ஐ .சி .ஏ. நிலவன் மாநிலத் தலைவர் மதுரை மாவட்ட பால்பாண்டி ஆகியோர் கலந்து கொண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



▶ நீலகிரி மாவட்டம் குன்னூர் மிசின்ஹில் சிஎஸ்ஐ நடுநிலைப்பள்ளியில், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் விண்ணப்பங்களை பதிவு செய்யும் முதற்கட்ட சிறப்பு முகாமினை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் திடீர் ஆய்வு மேற்கொண்டார். உடன், கலெக்டர் சா.ப.அம்ரித், குன்னூர் வருவாய் கோட்டாட்சியர் பூஷணக்குமார் உட்பட பலர் உள்ளனர்.

### 40 நாடாளுமன்ற தொகுதிகளிலும் அதிமுக அமோக வெற்றி பெறும்

# திருமானூரில் மாஜி தலைமை கொறடா தாமரை எஸ்.ராஜேந்திரன் தகவல்



அரியலூர் ஜூலை 28-

40 நாடாளுமன்ற தொகுதிகளிலும், அதிமுக அமோக வெற்றி பெறும் என, திருமானூரில் நடைபெற்ற நிர்வாகிகள் கூட்டத்தில், முன்னாள் அரசு தலைமை கொறடா தாமரை எஸ். ராஜேந்திரன் கூறினார்.

அரியலூர் மாவட்டம், திருமானூர் சாமி திருமண மஹால் அரங்கத்தில் நடைபெற்ற, அதிமுக திருமானூர் கிழக்கு மற்றும் மேற்கு ஒன்றிய செயல் வீரர்கள் கூட்டத்துக்கு, கட்சியின் ஒன்றிய அவைத்தலைவர் அன்பழகன் தலைமை வகித்தார். திருமானூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் வடிவழகன் வரவேற்று பேசினார், திருமானூர் ஜம்பு தீர்மானங்களை படித்தார், சிறப்புரையாற்றிய அரியலூர் மாவட்ட செயலாளரும், முன்னாள் அரசு தலைமை கொறடாவுமான தாமரை எஸ்.ராஜேந்திரன் பேசினார்.

கூட்டத்தில் அரியலூர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத் தலைவர் பாஸ்கர், அரியலூர் தெற்கு ஒன்றிய செயலாளர் பொய்யூர் பாலசுப்பிரமணியம், வழக்கறிஞர் குலோத்துங்கன் மாவட்ட அணி நிர்வாகிகள் ஓட்ட கோவில் சிவசங்கர், அக்பர் ஷெரீப், ஊராட்சி மன்றத் தலைவர் பிரேம்குமார், முன்னாள் ஒன்றியச் செயலாளர்கள் குமரவேல், ராசி மனோகரன், திருமானூர் பகுதி அதிமுக நிர்வாகிகள் மாரியப்பன், முருகானந்தம், பாவேந்தன், விளாகம் ஜெயபால், தில்லை திருவாசகமணி, கீழப்பழுவூர் நல்லதம்பி உள்பட பலர் கலந்து கொண்டனர்,முடிவில் அதிமுக திருமானூர் மேற்கு ஒன்றியச் செயலாளர் சாமிநாதன் நன்றி கூறினார்.

### அரியலூர் மாவட்டம் நல்லாம்பாளையம் உள்ளிட்ட கிராமங்களில்

# ரூ.3.62 கோடி மதிப்பீட்டில் 15 புதிய வளர்ச்சித் திட்டப் பணிகள் போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்



அரியலூர்,ஜூலை.29-

செந்துறை ஒன்றியம் நல்லாம்பாளையம் உள்ளிட்ட கிராமங்களில் ரூ.3.62 கோடி மதிப்பீட்டில் 15 புதிய வளர்ச்சித் திட்டப் பணிகளை போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் துவக்கி வைத்தார், இந்நிகழ்ச்சிகள் மாவட்ட ஆட்சித்தலைவர் ஜா.ஆனி மேரி ஸ்வர்ணா தலைமையில் நடைபெற்றது.

அரியலூர் மாவட்டம் செந்துறை ஊராட்சி ஒன்றியம், சின்ன ஆனந்தவாடி காலனி கீழத்தெருவில், ரூ.7.76 இலட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் சாலை மற்றும் கழிவுநீர் கால்வாய் அமைக்கும் பணியினையும், சின்ன ஆனந்தவாடி மேலத்தெருவில் ரூ.9.59 இலட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் சாலை அமைக்கும்பணியினையும், சின்ன ஆனந்தவாடி காலனி கீழத்தெருவில் ரூ.8.68 இலட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் சாலை மற்றும் கழிவுநீர் கால்வாய் அமைக்கும் பணியினையும், ஆனந்தவாடி கிராமத்தில் ரூ.6.84 இலட்சம் மதிப்பீட்டில் மேலத்தெருவில் சிமெண்ட் சாலை அமைத்தல் பணியினையும், ஆனந்தவாடி கிராமத்தில் ரூ.8.78 இலட்சம் மதிப்பீட்டில் ஆனந்தவாடி ஊராட்சிக்கு உட்பட்ட சோழன்குறிச்சி ஏரி ஆழப்படுத்துதல் மற்றும் பலப்படுத்துதல் பணியினையும் அமைச்சர் எஸ்.எஸ் சிவசங்கர் தொடங்கி வைத்தார்.


அதனைத்தொடர்ந்து, உஞ்சினி கிராமத்தில் ரூ.12.10 இலட்சம் மதிப்பீட்டில்வடக்குதெரு குளம் ஆழப்படுத்துதல் மற்றும் பலப்படுத்துதல் பணியினையும், உஞ்சினி ஊராட்சியில் ரூ.13.16 இலட்சம் மதிப்பீட்டில் நியாயவிலை கட்டிடம் அமைத்தல் பணியினையும், உஞ்சினி கிழக்கு தெருவில் ரூ.11.40 இலட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் சாலை மற்றும் வடிகால் வாய்க்கால் அமைத்தல் பணியினையும், துவக்கி வைத்து பணிகளை தரமான கட்டுமானப் பொருட்களை கொண்டு விரைவில் முடித்திட சம்மந்தப்பட்ட அலுலர்களுக்கு அறிவுறுத்தினார்.

அதனைத்தொடர்ந்து குமிழியம் ஊராட்சியில் அமைந்துள்ள அரசு மேம்படுத்தப்பட்ட முதன்மை சுகாதார மருத்துவமனைக்கு மேலும் விரிவுபடுத்தும் விதமாக ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் புதிய வட்டார சுகாதாரம் மைய கட்டடம் அமைக்கும் பணியினை துவக்கிவைத்து, காசநோய் ஒழிப்புத்திட்டத்தின் சார்பில் ஊட்டச்சத்து அடங்கிய பொருட்களை நோயாளிகளுக்கு வழங்கினார்.

பின்னர் பரணம் கிராமத்தில் ரூ.12.13 இலட்சம் மதிப்பீட்டில் பரணம் - செல்லியம்மன் கோவில் குளம் ஆழப்படுத்துதல் மற்றும் கரைகளை பலப்படுத்துதல் பணியினையும், பரணம் கிராமத்தில் ரூ.6.81 இலட்சம் மதிப்பீட்டில் தெற்குபரணம்சிமெண்ட் சாலை அமைத்தல் பணியினையும், வடக்கு பரணம் கிராமத்தில் ரூ.13.16 இலட்சம் மதிப்பீட்டில்நியாயவிலை கட்டடம் அமைக்கும் பணியினையும், செம்மண்பள்ளம் கிராமத்தில் ரூ.53.43 இலட்சம் மதிப்பீட்டில் நாகல்குழி முதல் செம்மண்பள்ளம் வரை சாலை அமைக்கும் பணியினையும், கீழமாளிகைஊராட்சியில் ரூ.37.59 இலட்சம் மதிப்பீட்டில்கீழமாளிகை முதல்இரட்டை ஆலமரம் வரை சாலை அமைக்கும் பணிகளையும், நல்லாம்பாளையம் கிராமத்தில் ரூ.111.27 இலட்சம் மதிப்பீட்டில் இலங்கைசேரி முதல் நல்லாம்பாளையம் வரை சாலை அமைக்கும் பணிகளையும் துவக்கி வைத்துப் பணிகளை தரமாகவும்,விரைவாகவும் முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் போக்குவரத்துத் துறை அமைச்சர் சிவசங்கர் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் இலக்குவன், உடையார்பாளையம் வருவாய்கோட்டாட்சியர் பரிமளம், துணை இயக்குநர் சுகாதாரம் அஜித்தா, ஊரகவளர்ச்சித் துறை செயற்பொறியாளர் பிரபாகர், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பிரபாகரன், ஜாகிர் உசேன், ஊராட்சிமன்றத் தலைவர்கள் உஞ்சினி முருகேசன், நல்லாம்பாளையம் கொளஞ்சிநாதன், குமிழியம் ஆனந்தி பழனிவேல், நாகல்குழி கோவிந்தசாமி, திமுக செந்துறை ஒன்றிய செயலாளர் செல்வராஜ், எழில் மாறன், திமுக பிரமுகர்கள் சோழன் குறிச்சி லட்சாதிபதி, உஞ்சினி செல்வகுமார், செந்துறை காளமேகம், கருணாநிதி, சிறு கடம்பூர் சுந்தர், வட்டார மருத்துவ அலுவலர் குமிழியம் அசோக சக்கரவர்த்தி, மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# அரியலூர் மாவட்டத்தில் அனைத்து தொழிற்சங்க கூட்டமைப்பு சார்பில் வேன் பிரச்சாரம்



அரியலூர்,ஜூலை.29-

அரியலூர் மாவட்டத்தில் அனைத்து தொழிற்சங்க கூட்டமைப்பு சார்பில் வேன் பிரச்சாரம் நடைபெற்றது இது பற்றி கூட்டமைப்பு தலைவர் தண்டபாணி வெளியிட்ட செய்தி குறிப்பில் கூறியுள்ளதாவது:

தொழிலாளர் விரோத, மக்கள் விரோத விவசாயிகள் விரோத, ஜனநாயக விரோத போக்குகளை கடைபிடிக்கும், ஒன்றிய பாஜக மோடி அரசை கண்டித்து, அரியலூர் மாவட்டத்தில் தொழிற்சங்க கூட்டமைப்பு சார்பாக, அரியலூர் அண்ணாசிலை அருகில் இருந்து வேன் மூலம், மக்கள் சந்திப்பு பிரச்சாரம் இயக்கம் தொடங்கியது.


ஏஐடியுசி மாவட்டப் பொதுச் செயலாளர் த.தண்டபாணி, தொமுச மாவட்டச் செயலாளர் ரெ.மகேந்திரன், சிஐடியு மாவட்டச் செயலாளர் பி.துரைசாமி, ஐஎன்டியுசி மாவட்டத் தலைவர் விஜயகுமார் மற்றும் ஹச்.எம்.எஸ்.நாகராஜ் ஆகியோர் தலைமைலான பிரசாரக் குழு, கீழப்பழுவூர் கடைவீதியில் தொடங்கி, திருமானூர் ஏலாக்குகுறிச்சி, குருவாடி, கடம்பூர், விக்கிரமங்கலம், முத்துவாஞ்சேரி, ஸ்ரீபுரந்தான், தா.பழூர், ஜெயங்கொண்டம், வி. கைகாட்டி வழியாக அரியலூர் மாதா கோவில் அருகே பிரசாரம் நிறைவு பெற்றது. பிரசாரக்குழுவில் சிஐடியு சிற்றம்பலம், சந்தானம், இளைஞர் பெருமன்றம் ரெங்கநாதன், தொ.மு.ச சின்னையன் மற்றும் ஆங்காங்குள்ள தொழிற் சங்க மையங்களின் பிரதிநிதிகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர், இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.



# என்எல்சியில் வன்முறை : பாமக தலைவர் கைதுக்கு பின் விடுதலை

# அறுவடை செய்யும் வரை காத்திருக்க முடியாதா? உயர்நீதிமன்றம் டென்ஷன்





# கேரளா லாட்டரி 10 கோடி பரிசு தூய்மை பணியாளர்களுக்கு ஜாக்பாட்


| சென்னை / புதுக்கோட்டை | 29.07.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10 |
|---|---|---|---|---|

புதுகை வரலாறு நாளிதழ்

29.07.2023 சனி

புதுமை

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

**பி. சா. சுப்பிரமணிய சாத்திரியார்** , தமிழக சமக்கிருத, தமிழறிஞர், உரையாசிரியர் (பி.1890) (இ.1978)



**எட்வர்ட் குபேர்** , புதுச்சேரியின் 1வது முதலமைச்சர் (பி.1894) (இ.1979)



**சிற்பி பாலசுப்பிரமணியம்** , தமிழகக் கவிஞர், மொழிபெயர்ப்பாளர், இதழாசிரியர் (பி.1936)



## இன்றைய நினைவு நாள்

**ஈஸ்வர சந்திர வித்யாசாகர்** , இந்தியக் கல்வியாளர், எழுத்தாளர் (பி.1820) (இ.1891)



**அருணா ஆசஃப் அலி** , இந்திய விடுதலை இயக்கத் தன்னார்வலர் (பி.1909) (இ.1996)



**கருமுத்து தியாகராசர்** , இந்தியத் தொழிலதிபர் (பி.1893) (இ.1974)



## பன்னாட்டுப் புலி நாள்